**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE OF ATTUR**

**SC.No. 260/2023**

**Deposition of: PW - (LW - )**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : முருகவேல் | **Father Name :** | |
| **Village** | : | **Taluk** | : |
| **Nationality** | : | **Religion** | : |
| **Calling** | : | **Age** | : |

**Solemnly affirmed by in accordance with the provision of Oath Act 44 of 1969 Date: 18.12.2023 at 11.35 a.m to 12.15 p.m.**

எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். அவருடைய வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.

முதல் விசாரணை:

1) நான் தற்போது வீரகனூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிசெய்து வருகிறேன். கடந்த 22.08.2020 ஆம் தேதி காலை 05.00 மணிக்கு காவல் ஆய்வாளர் மற்றும் போலீசாருடன் மணிவிழுந்தான் காலனி ஜங்கஷன் அருகே வாகன தணிக்கை செய்த போது எங்களை பார்த்து நிற்காமல் சென்ற ஆம்னி வெள்ளை நிற காரை சோதனை செய்த போது அதில் 180 எம்எல் அளவுகொண்ட கண்ணாடி பாட்டில்களில் 48 எண்ணிக்கை கொண்ட 12 பெட்டிகளில் காப்பர் Barrel VSOP பிராந்தி போலி மது பாட்டில்களும் அது இல்லாமல் கட்டைபையில் 24 குவாட்டர் பாட்டில்களும் இருந்தது. அவரை பிடித்து விசாரித்த போது அவர் பெயர் சந்திரசேகரன் (1ம் எதிரி) என்று சொன்னார்.

2) மேலும் அவரை அவரது வீட்டிற்கு அழைத்து சென்று விசாரித்த வகையில் அங்கும் அட்டைபெட்டியில் குவாட்டர் பாட்டில் வைத்திருந்தார். மேலும் ஸ்பிரிட் 3 0 லிட்டர் வீதம் 4 கேன் வைத்திருந்தார். மேலும் பாட்டில்கள் லேபிள்கள் மற்றும் மூடியை ஒட்டும் மெஷின் ஆகியவை இருந்தது. பிறகு விஏஓ வை அழைத்து வந்து அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றோம். பிறகு பொருட்களை மகஜரில் கைப்பற்றினோம். பிறகு 1ம் எதிரியை கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து அவரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினோம்.

3) அவ்வாறு கைப்பற்றப்பட்ட 600 எண்ணிகையிலான VSOP காப்பர் பேரல் பிராந்தி பாட்டில்கள் **அ.சா.பொ.1** ஆகும். அதே பிராண்டு கொண்ட 288 காப்பர் பேரல் பிராந்தி பாட்டில்கள் (6 அட்டைபெட்டியில் தலா 48 வீதம் ) இருந்தது. அது **அ.சா.பொ.2** ஆகும். 35 லிட்டர் பிடிக்கக்கூடிய 4 வெள்ளை நிற பிளாஸ்டிக் கேனில் தலா 30 லிட்டர் வீதம் 120 லி எரிசாராயம் **அ.சா.பொ.3** ஆகும். 120 லி எரிசாராயம் ஆய்விற்காக எடுக்கப்பட்டது. 35 லி பிடிக்ககூடிய வெள்ளை நிற காலி பிளாஸ்டிக் கேன்கள் 6 எண்ணிக்கை **அ.சா.பொ.4** ஆகும். காப்பர் பேரல் VSOP பிராந்தி ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட 180 எம்எல் அளவுள்ள பாட்டில்கள் **அ.சா.பொ.5** ஆகும். பாட்டில் மூடி போட பயன்படுத்தப்பட்ட இரும்பு மெஷின் -1 அது **அசாபொ.6** ஆகும். காப்பர் பேரல் VSOP பிராந்தி என்ற ஸ்டிக்கர் 4100 எண்ணிக்கை அது **அசாபொ.7** ஆகும். 1 கிலோ அளவு கொண்ட 3 பிளாஸ்டிக் டப்பாவில் டாப் டைப் பிளைன் காஸ்டிக் கேரமெல் கைப்பற்றப்பட்டது அது அசாபொ.8 ஆகும். 500 எம்எல் அளவுகொண்ட ஒரு பிளாஸ்டிக் பாட்டிலில் டாப் cognac பிராந்தி Essence கைப்பற்றப்பட்டது. அது **அசாபொ.9** ஆகும். 180 மிலி அளவுள்ள கண்ணாடி பாட்டில்களில் மூடிக்கூடிய மூடிகள் 8250 எண்ணிக்கையில் கைப்பற்றப்பட்டது. அது **அசாபொ.10** ஆகும். 180 மி அளவுகொண்ட 5 கண்ணாடி பாட்டில்கள் கைப்பற்றப்பட்டது. அது **அசாபொ.11** ஆகும். ஒரு லிட்டர் அளவுள்ள கேமல் கம் 3 பாட்டில் அது **அசாபொ.12** ஆகும். காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

4) சம்பவத்தன்று காலை 04.00 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து கிளம்பி 05.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றோம். ஆய்வாளர் அவருடைய இருசக்கர வாகனத்தில் வந்தார். சாட்சி அவர் நான்கு சக்கர வாகனத்தில் வந்தார் என சொல்கிறார். அதன் பிறகு அவருடன் நாங்கள் எங்கள் இருசக்கர வாகன்ததில் அவர் பின்னால் சென்றோம். சம்பவ இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 5 கி.மீ தூரம் இருக்கும். மேற்படி கைப்பற்றப்படட்ட பொருட்களின் பாட்டில்களை நாங்களே எண்ணி பார்த்தோம். அதற்கு ஒரு கால் மணி நேரம் ஆகியிருக்கும். 1ம் எதிரியை விசாரித்து விட்டு அவரை அவருடைய வீட்டிற்கு அழைத்து சென்றோம்.

5) மேற்படி சம்பவ இடத்திற்கும், 1ம் எதிரியின் வீட்டிற்கும் சுமார் 3 கி.மீ தூரம் இருக்கும். எந்த நேரத்தில் எதிரியின் வீட்டிற்கு சென்றோம் என தற்போது ஞாபகம் இல்லை. மேற்படி எதிரியின் வீட்டில் அந்த பொருட்களை எல்லாம் பார்ப்பதற்கு சுமார் 1/2 மணி நேரம் ஆகியிருக்கும். அதன் பிறகு தான் விஏஓ விற்கு ஆய்வாளர் தகவல் சொன்னார். அவர் எவ்வாறு தகவல் சொன்னார் என்று எனக்கு தெரியாது. அவ்வாறு கைப்பற்றப்பட்ட எரிசாராய கேன்களில் இருந்து தனித்தனியே 2 பாட்டில்களில் (375 எம்எல் பிடிக்ககூடியது ) தலா 350 எம்எல் வீதம் எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டது.

6) தகவல் கேட்டு விஏஓ உடனே வந்து விட்டார். ஆனால் என்ன நேரம் என்று தற்போது ஞாபகம் இல்லை. உடனே அவரை காவல் நிலையம் அழைத்துச்சென்றோமா என்றால் சம்பவ இடத்தில் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர், எல்லாம் தயார் செய்து விட்டு தான் காவல் நிலையம் சென்றோம். மேற்படி ஆவணங்கள் எதிரி வீட்டின் கூரைகொட்டாய்க்கு முன்புறம் தான் எழுதப்பட்டது. மேற்படி ஆவணங்களை யார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆனால் ஆய்வாளர் முதலில் எழுதினார். சம்பவம் நடந்த மறுநாள் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

7) நான் இவ்வழக்கின் எந்த ஆவணத்திலும் கையெழுத்திடவில்லை. மேற்படி வாகன தணிக்கையில் ஈடுபட்டதாக சொல்லும் ஆம்னி வேனுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் அது தவறு. அதை தான் கைப்பற்றினோம். மேற்படி கைப்பற்றப்பட்ட மாதிரி பாட்டில்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் அது தவறு. மேற்படி சான்று பொருள்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் எங்களுக்கும் வேறு வகையில் கிடைத்த பொருட்களை கொண்டு அவை எதிரிகளுடையதுதான் என்று பொய்யாக இவ்வழக்கை நாங்கள் புனைந்துள்ளோம் என்றால் அது தவறு.

8) அதே போல் பிராந்தி லேபிள்கள்,மூடிகள், கம்கள், பிராந்தி எஸ்சன்ஸ் ஆகியவற்றிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை அது எங்களால் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் அது தவறு. மேற்படி கம், மூடி, மெஷின் ஆகியவை சாதாரணமாக கிடைக்ககூடியவை தான் என்றால் அது தவறு. மெஷின் அவ்வாறு கிடைக்காது. நான் சொல்வது போன்று சம்பவம் நடைபெறவில்லை என்றும்

நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் எதிரிகள் மீது போடப்பட்டுள்ள பொய்யான வழக்கிற்கு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது தவறு.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan**
**Assistant Sessions Judge,**
**Attur.**